REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 277

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு (இலங்கை உட்பட) | |
| ஆண்டு | ரூ. 24—0—0 |
| 6 மாதம் | ரூ. 12—0—0 |
| 3 மாதம் | ரூ. 6—0—0 |
| வெளிநாடு: | |
| ஆண்டு | ரூ. 30—0—0 |
| 6 மாதம் | ரூ. 15—0—0 |
| 3 மாதம் | ரூ 7—8—0 |

சென்னை : சித்திரை 25உ வெள்ளி (7—5—54) ★ ★ ★ வெளியூர் : சித்திரை 26உ சனி (8—5—54)

# வளர்ச்சி இழக்கிறார்-வசை பாடுகிறார்!

(★)

# சியாங்-கே-ஷேக்கை விட உயர்ந்தவரா இந்த நேரு?

## அதிகாரம் ஒரு மணல் மேடு என்பதை அவர் மறந்துவிடக்கூடாது

### கண்ணியத்தை இழந்து பேசுவது கருத்தற்ற செயலாகும்

## சேலம் மாநாட்டில் அண்ணா அறைகூவல்

*2—5—54-ல், சேலத்தில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில், தி. மு. கழகத்தினரைக் குறித்து, சிதம்பரத்தில், நேரு கூறியவற்றிற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது :—*

"நாம், நம்முடைய நாட்டை நமக்காக்கிக் கொள்ள முற்படும்போதுதான் பண்டித நேருவின் வாய்த்துடுக்கு நம்மைப் 'பைத்தியக்காரர்கள்' என்று சொல்ல முற்பட்டிருக்கிறது. நான், அறை கூவி அழைக்கிறேன் அந்தப் பண்டிதரை— 'எங்களை எல்லாம் ஒரு ஆறு மாத காலத்திற்கு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கட்டும், அவருக்குத் தைரியமிருந்தால்! அந்த ஆறு மாதங்களிலே, அங்குள்ள பைத்தியங்களை நாங்கள் தெளிவுபெறச் செய்கிறோமா, இல்லையா என்று அவர் பார்க்கட்டும்! நாங்கள் பைத்தியங்களை தெளிய வைக்கும் டாக்டர்கள் என்பதை அவர் அறிய வேண்டும். மூன்று மாதம் எங்களை சிறைக்கனுப்பினார்கள்; அங்குள்ள கைதிகள் எல்லாம் வெளியே வந்ததும், 'கழகத்தில் சேரட்டுமோ? பணியாற்றட்டுமோ?' என்றல்லவா கேட்ட வண்ணமுள்ளனர். அவர்கள் எல்லாம் யார் தெரியுமா? நோன்பு நோற்பவர்கள்! நாம்தானே அவர்களை எல்லாம் அழுகிய பண்டங்கள், புழுத்த அரிசி என்ற எண்ணத்தில் ஒதுக்கி வைத்திருக்கிறோம்!

நம்மை வசைபாடித் திரியும் இந்தப் பண்டித நேருவை வெளி நாட்டவா என்ன பேசுகிறார்கள் தெரியுமா? இரண்டு நாட்களுக்கு முன்னால் பாகிஸ்தான் மக்கள் சபையில் பேசும்போது, அப்துர் ரப் நிஷ்டார் என்பவர், 'மண்டைக் கர்வம் பிடித்த கப்சா அளப்பவர் நேரு!' என்று பேசியுள்ளார். நாமாவது சாதாரண மனிதர்கள்! அறப்போர் வீரர்கள்; ஆனால், பண்டித நேரு இப்படிப் பேசப்படலாமா? பட்டினத்தார் பாடல் ஒன்றுண்டு—'தன்வினைத் தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'—என்று! நான் இருவரின் போக்கையுமே கண்டிக்கிறேன்—பொது வாழ்வில் இருக்க வேண்டிய கண்ணியத்தை இருவரும் இழந்து பேசுவதால்!

பண்டித நேரு உணர வேண்டும், இனி அவருக்கு வளர்ச்சி இல்லை என்பதை! ஆயுளும் சரி, அவர் பெற்றிருக்கிற அரசியல் அந்தஸ்தும் அதிகாரமும் சரி, இனி வளரப் போவதில்லை! அரசியல் அதிகாரம் மணல்மேடு போன்றது! அதன் உயரத்தில் உட்கார்ந்திருக்கும்போது வானம் எட்டுவது போன்றும், பூமி, பாதாளத்திலிருப்பது போன்றும் தோன்றலாம்; ஆனால், அந்த மணல் மேடு சரியக்கூடியது என்பதையும் மறந்துவிடக் கூடாது!

இப்படித்தான் இருந்தான் சீனாவிலே சியாங் கே-ஷேக்! இன்று அவன் எங்கே? அவனை வளர்த்த கோமின்டாங் கட்சி எங்கே?—அவன் அமெரிக்கா சென்றான். அமோகமாக வரவேற்கப் பட்டான்; இந்தியாவிற்கும் வந்தான், சபர்மதி ஆஸ்ரமத்திற்குச் சென்றான், காந்தியாரைக் கண்டான்; இங்கும் அவனுக்கு இனிய வரவேற்பு தரப்பட்டது; அமெரிக்காவின் 'செல்லப்பிள்ளை' என வர்ணிக்கப்பட்டான்; அத்தகையோன் இன்று எங்கே? பார்மோசாத் தீவிலே, 'கலம் ஏதேனும் வருமா, நம்மைக் காப்பாற்ற' என ஏங்கிக் கிடக்கிறான், மக்களால் அடித்துத் துரத்தப்பட்டு—அவனைக் காட்டிலுமா இந்தப் பண்டிதர் உயர்ந்தவர்?

நேருவின் வாழ்வு மிக இன்பகரமானது; பிறந்ததும், பொன்னும் வைரமும் இழைத்த தொட்டிலில்தான் தூங்கினார்; உணவு உண்ண தங்கத் தாம்பாளம்; உடனிருந்து கவனிக்க வெள்ளைக்காரத் தாதியர்கள்; உயர் படிப்பு இங்கிலாந்தில்; இப்படி அவர் வாழ்வு மிக மகிழ்ச்சிகரமாக இருந்ததாக அவரே எழுதியுள்ளார். அரசியலிலும் காந்தியாரின் வாரிசு!

எங்களைப் பாருங்கள்—சாதாரணமானவர்கள்; குலத்தாலோ, பணத்தாலோ நாங்கள் உயர்ந்தவர்களா என்றால், இல்லை; அரசியலிலாவது 'காந்தியாரின் வாரிசு' என நேரு பெற்ற பெருமையை நானோ தம்பிமார்களோ நமது தலைவரிடமிருந்து பெற்றிருக்கிறோமா என்றால் இல்லை; தந்தை, வாரிசாக வேண்டிய தனயனையே 'ஆகாதவன்' எனத் தள்ளிவிட்டார்—தம்பி சம்பத்தைத்தான் சொல்கிறேன்—நானோ, அரசியலில் அவரின் வாரிசாக வேண்டியவன்; 'ஆகாதவன்' என்று ஒதுக்கப்பட்டுவிட்டேன்; இந்த நிலையிலுக் கூட நம்மை இன்னமும் பல்லிழந்த நரிகளும் ஓநாய்களும் கேலி பேசுகின்றன. 'சாதாரண' நிலையிலுள்ள நம்மைப் பார்த்துத்தான் 'உயர்ந்த' மனிதரான பண்டிதர் 'பைத்தியக்காரர்கள்' என்கிறார்; அவரை இன்னொருவன், 'மண்டைக் கர்வி' என்று சொல்கிறான்.

இத்தனையையும் தாங்கிக் கொண்டுதான் நாம், லட்சியத்தை நோக்கி, வீரநடை போடுகிறோம்; நமது லட்சியம் மிகப்பெரியது; அந்த லட்சியத்தை மக்களிடம் விரிவாக எடுத்துச் சொல்ல, மட்டும் நமக்கு நல்ல வசதியும் வாய்ப்பும் தேவை.

## கொரியா பற்றி அல்ல நாம் பேசுவது!

# கொள்ளை போகும் நமது வளங்கள் பற்றி!

### மாற்றுக் கட்சியினருக்கு அண்ணாவின் தெளிவுரை

*சேலம் மாவட்ட தி. மு. கழக இரண்டாம் மாநாடு இத்தனை சிறப்பாக நடைபெற்றிருப்பது சேலத்தில் நாம் பெற்றுள்ள உரத்தையும், பலத்தையும் காட்டுகிறது. வந்தவர் முகம் செந்தாமரையென மலரும் வகையில் உபசரிப்பும், தொண்டர்தம் உழைப்புமிருந்தன; மாநாடு இவ்வளவு சிறப்புற, திறம்பட நடத்திய நண்பர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நண்பர் நெடுஞ்செழியன் சற்று முன் திராவிட வளங்கள் பற்றி, செல்வங்கள் பற்றி எடுத்துச் சொன்னார். அந்தச் செல்வங்களை எல்லாம் காட்டிலும், இங்கு குழந்தைச் செல்வம் அதிகமாக இருப்பதுதான் மகிழ்கின்றேன். குழந்தைச் செல்வங்களையும் அழைத்துக்கொண்டு கும்பல் கும்பலாகத் தாய்மார்கள் வந்துள்ளனர். குழந்தைகள் மகிழ்வாக ஆடிப்பாடி மகிழ்வதை, அமைதி குலையாது மாநாடு நடக்க, அன்புடன் கட்டுப்படுத்திக்கொண்ட தாய்மார்களையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.*

*"இப்படிப்பட்ட பெரிய மாநாட்டை எப்படி இவர்களால் நடத்த இயலுகிறது; எந்த தைரியத்தில் இவர்கள் இத்தனை பெரிய பந்தல் அமைத்து மாநாட்டை நடத்துகிறார்கள்?" என்ற சந்தேகம் மாற்றுக் கட்சியினருக்கு ஏற்படுகிறது.*

*அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்—பொதுஜனத் தொடர்புடைய இயக்கங்களில், இன்று இந்த நாட்டில் தி. மு. கழகம்தான் தலைமை தாங்குகிறது; மாநாட்டின் வெற்றிக்குக் காரணம், கழகத் தோழர்களும், தொண்டர்களும் மட்டுமல்ல, பொதுமக்களும்—என்பதை!*

*நமது கருத்துகளை நாட்டு மக்களுக்கு நன்கு அறிவிக்க நல்லதோர் சாதனம் கூடக் கிடையாது; தமிழ் தெரியாத ஏனையோருக்கு நமது கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஏடேனும் இல்லை ஆங்கிலத்தில்; இந்த நிலையில் இருக்கிற நாம்தான் இத்தகு சீரும் சிறப்பும் உள்ள மாநாடுகள் நடத்தும்போது — எப்படி முடிகிறது நம்மால்? — எனக் கேட்கிறார்கள்.*

*மாநாட்டிற்கு வந்துள்ள நீங்கள் தரும் கட்டணத் தொகைகளும், கிளைக் கழகத் தோழர்கள் ஆங்காங்கே மக்களிடம் திரட்டித் தரும் சிறு சிறு நன்கொடைகளும்தானே மாநாடு நடைபெற உதவுகின்றன? இதைத்தான், மாற்றுக் கட்சியினர், தி. மு. கழகம் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.*

*மக்கள் ஏன் நம்மைப் பின்பற்றுகிறார்கள்? நாம் என்ன பண்டிதர்களா? இல்லையே! அல்லது அம்மையிடம் 'ஞானப் பால்' குடித்தவர்களா? அதுவும் அல்லவே! நம்மில் பலருக்கு தாய்ப்பால் கூட சரியாகக் கிடைத்திருக்காதே! சாதாரணமானவர்கள், மிகச் சாதாரணமானவர்கள்; மக்கள் நம்மை ஆதரிக்கிறார்கள், பின்பற்றுகிறார்கள், போற்றுகிறார்கள் என்றால் அந்த மதிப்பு நமக்கல்ல—நமது கொள்கைகளுக்கு!*

*நாம், கொரியப் போர் நிறுத்தம் பற்றி, அய்சனோவரின் 'சமாதானத்' திட்டத்தில் உள்ள உள்ளடக்கம் பற்றி இங்கு பேசவில்லை*

*மாறாக, நமக்குக் காலடியிலே கிடக்கிற தங்கமும் கனிப் பொருள்களும், கடலிலே கிடைக்கிற முத்தும், வளமான வயல்களும், செல்வங்களும் இந்த நாட்டு மக்களுக்கு, இந்த நாட்டுக்குரிய திராவிடர்களுக்கு, உழைப்பவனுக்குப் பயன்படவேண்டும் என்று பேசுகிறோம்; உழைப்பாளர்களின் வேதனையும், கண்ணீரும் துடைக்கப்பட இந்த நாட்டுச் செல்வங்கள் பயன்பட வேண்டும் என்று சொல்கிறோம்; அதனால்தான் நாம், இந்த நாட்டினரின் வியர்வையை—உழைப்பை, குருதியை—தியாகத்தைப் பெற்று நாம் வளர்கிறோம்; நமது கொள்கைகள் வெற்றி பெறுகின்றன. இதை நம்முடைய மாற்றுக் கட்சியினர் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்."*

### திருச்சியில் கூடுவோம்; திட்டங்கள் வகுப்போம்;

"எஞ்சியுள்ள மாவட்ட மாநாடுகள் நடைபெற்றதும், வருகிற ஜனவரியில், திருச்சியிலே, இரண்டாம் மாநில மாநாட்டை நடத்தலாம் என எண்ணுகிறேன்; அந்த மாநாட்டிலே திராவிடத்தின் விடுதலைக்கான நேரடித் திட்டங்களை வகுப்போம்!"

—சேலம் மாநாட்டில் அண்ணா

# வடநாட்டு அரசை வளைப்பதற்கு 'வரி கொடா இயக்கம்'

*'தி. மு. கழகம் நேரடியாக அரசியலைக் கைப்பற்ற வேண்டும்' என்று கூறப்படுவது பற்றி பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டதாவது :—*

"தி. மு. கழகம் அரசோச்சுவதென்றால், அரசியலிலே பெரும் பெரும் நெருக்கடிகளை, வடநாட்டவர் சமாளிக்க இயலாது உண்டுபண்ணிக்கொண்டிருக்க முடியும், சட்ட சபையிலிருந்தால்! நான் சொல்கிறேன் சந்தேகப்படு

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—5—54 வெள்ளி


# எந்த அடிப்படையில்?

இந்தியத் துணைக் கண்டத்தில், இன்றுள்ள மாநில அமைப்பு, வெள்ளையன் விட்டுப்போன விபரீத ஏற்பாடாகும். பல மொழி, நாகரீகம், பண்பாடு வளம் பெறுவதைத் தடுத்து நாட்டு மக்கள் ஒற்றுமைப்பட முடியாமல் பிளவுபட்டுக் கிடக்கட்டும் என்ற உள்ளெண்ணத்தின் காரணமாக, இந்த மாநில ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறான் என்று காங்கிரஸ் கட்சியினர், அந்தக் காலத்தில் குறை கூறினது கொஞ்ச நஞ்சமல்ல. வெள்ளையர்கள் செய்து வைத்துள்ள இம்மாநில ஏற்பாடுகளுக்குக் காங்கிரஸ் கட்சியினர் முன்னரேயே செய்த விமர்சனம் பொருந்தக் கூடியதாக இருந்தாலும் இருக்கலாம், இல்லாமற்போனாலும் போகலாம் அல்லது பல மொழியினரிடமும் சுதந்திர எண்ணத்தை உருவாக்க மிகைப்படக் கூறிய கூற்றாக இருந்தாலும் இருக்கலாம். எது எப்படி இருந்தாலும், காங்கிரஸ் கூற்று உண்மையின் முழு உருவம் என்று மட்டும் ஒப்புக்கொள்வதற்கில்லை என்பது உறுதி.

இந்தியா ஒரு துணைக் கண்டமேயல்லாது, ஒரே நாடு அல்ல. ஒரே ஆட்சி நடைபெறும் ஒரே நாடாக இந்தியா என்றும் இருந்தது கிடையாது என்பதை, இந்தியத் துணைக் கண்ட வரலாறு விளக்கிக் காட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த வரலாற்று உண்மையை மறுப்பவருமில்லை; மறைப்பதற்கு முடிவதுமில்லை. நிர்வாகத் துறை ஒன்றை மட்டுமே, அடிப்படையாகக் கொண்டு, வெள்ளையன் இன்றுள்ள மாநில ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தான் என்பது வெளிப்படை. பற்பல மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்ட, பல்வேறு மொழிவழி வந்த மக்களை, ஒரு நிலப் பரப்புக்குள் அடைத்து வைத்து, இந்தியத் துணைக் கண்டத்தைப் பல மாநிலப் பிரிவுகளாகப் பிரித்து வைத்ததற்கு, வெளிப்படையாக எவரும் காட்டக்கூடிய ஒரே ஒரு சமாதானம், நிர்வாகத் துறை பற்றியதாகத்தான் இருக்க முடியும். பொருளாதாரக் காரணமோ, ஒரு ஏகாதிபத்தியத்தின் கடைக்காலாக இருந்து வருவதினால், வெள்ளையன் செய்த மாநில ஏற்பாடுகளுக்கும், அந்தப் பொருளாதாரத் துறையையும் தக்க ஒரு காரணமாகக் கொள்வதில் தவறு இருக்கத் துளியும் நியாயமில்லை. எனவே, வெள்ளையன் இரண்டே இரண்டு நிலைகளைத் தான் கருத்திற்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தை மாநிலங்களாகப் பிரித்து வைத்தான் என்பது ஐயத்திற்கிடமின்றி தெளிவாகிறது. அதாவது அரசியல் நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய இரண்டையும் முன் தள்ளித்தான், வெள்ளையன் மாநிலப் பிரிவினைகளைச் செய்திருக்கிறான் என்பது உறுதிப்படுகிறது. நிற்க.

வெள்ளையன் செய்த மாநில ஏற்பாடுகளை அறவே அகற்றி, மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தி அமைத்தாக வேண்டும் என்ற கொள்கையை காங்கிரஸ் கட்சி திட்டம் படுத்தியது. அதற்கொப்ப, தனது ஆட்சி அமைப்பையும், மொழி வழியமாக வைத்து, பிரித்து செயலாற்ற முனைந்தது. இன்னும், இதே ஏற்பாட்டின்படிதான் அகில இந்திய காங்கிரஸ் இயங்கியும் வருகிறது.

மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்ட ஒரு கட்சி, அத்தத்துவத்தை மேற்கொண்டு, தனது அமைப்பையும் மொழி அடிப்படையில் உருவாக்கி, இயங்கி வருவது நியாயமானதாகும். இந்நிலையில் சொல்லும் செயலும் ஒத்து இருப்பது பாராட்டுதலுக்குரியதேயாகும்.

வெள்ளையன் இங்கிருந்த காலத்தில், தவறுடையது எனக் கொண்ட ஒரு கொள்கையை, அவன் வெளியேறியதும், அவன் விட்டுச் சென்ற அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு, அவனைப்போலவே நியாயமானது என வாதிடும் நிலைக்கு இன்று காங்கிரஸ் வந்திருக்கிறது. இது, முன்னுள்ள கொள்கைக்கு முரண்பாடுடையதாக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள பலஹீனமான—ஆதாரமான அடிப்படைக் கொள்கை மாற்றத்தையும் அம்பலமாக்குகிறது. நிற்க.

காங்கிரஸ் முன்னுள் செய்துகொண்ட முடிவுப்படி, மொழியை அடிப்படையாக வைத்து, அண்மையில் ஆந்திர மாநிலத்தை உருவாக்கி இருக்கிறது. அதற்கு டெல்லி காங்கிரஸ் சர்க்காரின் ஆசீர்வாதமும், அதிகார முத்திரையும் கிடைத்தும் இருக்கிறது. ஆந்திர மாநில சர்க்காரும் நன்றாகத்தான் நிர்வாகம் செய்துகொண்டு இருக்கிறது. பலம் பொருந்திய டெல்லி மத்திய சர்க்கார் ஆட்சியில், மற்ற மாநில சர்க்காருக்கு உள்ள சிக்கலும், தொல்லையும் போலத்தான் ஆந்திர மாநிலத்திற்கும் இருந்து வருகிறது. மொழியை அடிப்படையாகக் கொண்டு ஆந்திர மாநிலம் ஏற்பட்டுவிட்டதினால், புதிய நிர்வாகத் தொல்லை எதுவும் யூனியன் சர்க்காருக்கு ஏற்பட்டுவிடவுமில்லை. மற்ற மாநிலங்களால் ஏற்படும் தொல்லைகளைச் சமாளிப்பதுபோலத்தான், ஆந்திர மாநிலத் தொல்லையையும் யூனியன் சர்க்கார் சமாளித்து வருகிறது. எனவே, மொழியை அடிப்படையாக வைத்து, மற்ற மாநிலங்களையும் திருத்தியமைப்பதால், இந்தியப் பேரரசுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. இருவகையில், இந்தியப் பேரரசு அச்சங்கொள்ள வேண்டிய தேவையும் இல்லை.

ஆனால், யூனியன் காங்கிரஸ் சர்க்காருக்கு மொழிவழியில், மாநில அமைப்பைத் திருத்துவது என்றாலே, குலை நடுக்கம் கண்டுவருகிறது. 'கூடாது, கூடாது' எனக் கூக்குரல் எழுப்புகிறது. நாட்டு மக்களின் ஒற்றுமை குலைந்துவிடுமெனக் கோவெனக் கதறுகிறது. மொழியைக் கொள்கை வேண்டாம், நிர்வாகத் துறையை மேற்கொள்வோம் என ஒப்பாரி வைக்கிறது. விஷயத்திற்குத் துளியும் தொடர்பில்லாத நீர்வளிக்குண்டின் அழிவாற்றலை எடுத்துக்காட்டி பிரதமர் நேரு, மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டுவோரை, கோரிக்கையைக் கைவிடுமாறு அச்சுறுத்துகிறார்!

காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கையினருடன் கலந்து கொள்ளக்கூடாது என தனது காங்கிரஸ் உறுப்பினரின் வாய்க்கும் கவசம் போடுகிறார். கட்டளையை மீறினால், கட்சியைவிட்டு விரட்டப்படுவர் என எச்சரிக்கையும் செய்கிறார்.

பொதுமக்கள் கருத்தை அறிவிக்கும் வானொலியாக காங்கிரஸ் கட்சி இருந்த காலம் ஒன்று உண்டு. இன்று அது வெறும் வரலாற்றுச் சம்பவமாகிவிட்டது. இந்த நடைமுறை உண்மையை, சென்றுபோன உலக வரலாற்றைத் திட்டிய ஆசிரியரான பண்டிதரால், உணர்ந்துகொள்ள முடியவில்லை!

காங்கிரஸ் தலைவரின் கட்டளைக்கு, கடல் அலையோசை போல எழும் மக்கள் குரல் பணிய மறுக்கிறது. மொழிவழியில் மாநிலங்கள் தேவை எனும் பேரொலி, இந்தியத் துணைக் கண்டத்தின் மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம் இவ்வாறு விண்ணதிரும்படியென முழங்கிய வண்ணம் உள்ளது. ஒலி கூடுகிறது; அதில் உறுதி உரம் பெற்றுவருவது தெரிகிறது. ஆனால், அதிகாரத்தால், கண்ணையும் காதையும் பறிகொடுத்திருக்கிற பண்டிதருக்கு, உரிமை குரலும் கேட்கவில்லை; அதை முழக்கும் மக்களின் எண்ணிக்கை கூடுவதும் காண முடியவில்லை. பரிதாபம்!

வெளியேறிய ஏகாதிபத்தியத்தின் பீடத்தில் அமர்ந்திருப்பதினால், தாம் அந்தக் காலத்தில் எழுதிய—பேசிய மக்கள் சுயநிர்ணய உரிமை பற்றிய அனைத்தையும், பண்டிதர் கழிவுக் கடையில் சேர்த்துவிட்டார். ஏகாதிபத்திய தொனியில் எச்சரிக்கை விடுகிறார். வெள்ளை ஏகாதிபத்தியவாதியைப் போல், நிர்வாகத் துறையை அடிப்படையாகக்கொண்டு, மாநிலங்களைத் திருத்தியமைக்க வேண்டும் என்று மாற்றிப் பேச பண்டிதர் முன்வந்திருக்கிறார். மொழி அடிப்படை, நிர்வாக அடிப்படையாக மாறிப்போயிருப்பதால், அதனால், எதிர்பார்க்கப்படும் விளைவுகளிலும் உருமாற்றம் இருக்கத்தானே செய்யும்? அந்த முடிவிற்குத்தானே எவரும் வந்தாக வேண்டும்? அதுதான் ஏகாதிபத்திய முடிவு! அதே அடிப்படையில்தான் இன்று யூனியன் சர்க்கார் இயங்கி வருகிறது!

**★★★★★★★★★★★-★★★★★★★★★★**

# அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தில், நடைமுறைக் காலத்தின் உறுப்பினராக இருந்து வருவோர், இப்பொழுது தங்கள் உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதற்கென்று தனி அறிக்கை பின்னர் வெளியிடப்பெறும்.

புதிய உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்க்க விரும்பும் கிளைக் கழகங்களும், புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்துக் கிளைக் கழகம் நிறுவ விரும்பும் புதிய ஊர்களைச் சேர்ந்த முக்கிய பொறுப்பாளர்களும், தலைமை நிலையத்திலிருந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாளைப் பெற்று, அதில், சேர விரும்பும் உறுப்பினர்களின் விபரங்களையும், கையெழுத்துக்களையும் பதிவு செய்து, உறுப்பினர் சந்தாத் தொகையுடன் அதனைத் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். விபரங்களை விண்ணப்பத் தாளில் காணவும்.

தலைமை நிலையத்தார் உறுப்பினர்க்குச் சேர வேண்டிய இரசீதுகளையும், கிளைக் கழகத்திற்குச் சேர வேண்டிய இரசீதுகளையும் தலைமை நிலையத்திலிருந்தே பதிந்து அனுப்புவார்கள்.

இனி இரசீது புத்தகம் யாருக்கும் அனுப்பி வைக்கப்பட மாட்டாது. உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள் மட்டுமே அனுப்பி வைக்கப்பெறும். விண்ணப்பத் தாளும், சந்தாத் தொகையும் வந்து சேர்ந்தவுடன், இரசீதுகள் தலைமை நிலையப் பொறுப்பாளரால் பதிந்து அனுப்பி வைக்கப்பெறும்.

தனிப்பட்ட முறையில் நேரிடையாகத் தலைமை நிலையத்தில் உறுப்பினராகச் சேர விரும்புவோர், தங்கள் பெயர், பால், வயது, தொழில், முகவரி, கையெழுத்து, எட்டு அணா ஆகிய வற்றுடன் தலைமை நிலையத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். தலைமை நிலையத்தார் இரசீது அனுப்பி வைப்பர்.

'அறிவகம்,'
சென்னை-13.

—நே. ஏ. மதியழகன்,
பொறுப்பாளர் - தலைமை நிலையம்

**★★★★★★★★★★★★★★★-★★★★★★**

## நாட்டின் தலைவர் வெளியேற்றப்பட்டார்!

பியூனஸ் அயர்ஸ், மே 6—

பாரகுவே நாட்டின் ஜனாதிபதியை இராணுவத்தினர் புரட்சி செய்து பதவியிலிருந்து விலக்கி விட்டதாகக் கூறப்படுகிறது.

## இந்தியா — இலங்கை பிரயாணம்

இந்தியா— இலங்கையிடையே பிரயாணத்துக்கு "விஸா" முறை ஜூலை 1-ந் தேதி முதல் அமுல் நடத்தப்படும் என இந்திய சர்க்கார் அறிவித்துவிட்டது.

## தோழர் நெடுஞ்செழியன் சுற்றுப் பிரயாணம்

★

8—5—54: வலங்கைமான்

9—5—54: நாகப்பட்டினம்

10—5—54: கோடம்பாக்கம்

11—5—54: சிதம்பரம்

## பாரிஸ் — சமரசம்!

புதுவை விடுதலைக் கிளர்ச்சியை அடக்குமுறையால் அழித்திட இயலாது என்று புரிந்து கொண்ட பிரெஞ்சு வல்லரசு, இப்போது, சமரசம் பேச இணங்கிவிட்டது.

பாரிஸ் பட்டணத்தில் பிரெஞ்சு சர்க்காரும், இந்திய சர்க்காரும் கூடிப் பேச ஏற்பாடாகி விட்டது.

பாரிஸ் சமரசக் கூட்டம் மே 14-ல் நடைபெற இருக்கிறது.

இந்திய சர்க்கார் பிரதிநிதியாக வெளிநாட்டிலாகா காரியதரிசி ஆர். கே. நேரு செல்கிறார்; பாரிஸ் செல்ல 12-ந் தேதி விமான மூலம் கிளம்புகிறார்.

## பிரெஞ்சு மந்திரி சபை பிழைத்தது!

### விடுதலை வீரரை முன்னிறுத்தி பிரதமரின் வேண்டுகோள்

பாரிஸ், மே. 6—

இந்தோ—சீனாபற்றி பிரெஞ்சு மந்திரி சபையின் கொள்கைகள் பற்றிய நம்பிக்கை ஓட்டில் பிரதமர் லேனியல் வெற்றி பெற்றார். சர்க்காரை ஆதரித்து 311 ஓட்டுகளும், எதிர்த்து 262 ஓட்டுகளும் கிடைத்தன.

"ஜினிவாவில் இந்தோ—சீனா பற்றி பேச்சு வார்த்தைகள் நடக்கும் தருணத்தில் சர்க்காரை கவிழ்க்கவேண்டாம்" என்று ஓட்டெடுப்புக்கு முன்னர் பிரதமர் லானியல் வேண்டுகோள் விடுத்தார்.

"வியட்மின் தலைவர் ஹோசிமின்னை சந்திக்கும் இச்சந்தர்ப்பத்தில் சர்க்காரைக் கவிழ்ப்பதற்கான சமயமாக வைத்துக்கொள்வது முறையல்ல" என்று குறிப்பிட்டார்.

## கல்வி விதிகளுக்குத் திருத்தம்

### மந்திரி தரும் விளக்கம்

சென்னை, மே. 6—

கல்வி விதிகளில் ஏற்கனவே உள்ள சில குறைகளை நீக்கவே திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும், ஆசிரியர் நியமனங்களை கலைத்துவிடச் சிக்க வேண்டியதில்லையென்றும், புதுக்கல்வித் திட்டத்திற்கும் இக்கல்வி விதிகளுக்கும் சம்பந்தமில்லையென்றும் அசெம்பிளியில் கல்வி விதிகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் பற்றிய கேள்விகளுக்கு கல்வி மந்திரி பதிலளித்தார்.

புது விதிகளின்படி ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஒரு நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளதென்றும் கல்வி அதிகாரிகளின் உத்தரவுக்கு எதிராக அப்பீல் செய்யவும் புது விதிகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்றும் கூறினார்.

## பதிவுத் திருமணம்

### வயது எல்லை நிர்ணயம்

புதுடில்லி, மே. 6—

விசேட சட்டத்தின் கீழ் விவாக வயதை இந்திய மேல் சபை 18-லிருந்து 21-ஆக உயர்த்தியது.

18 வயதிலிருந்து 21 வயது வரை ஆணும்—பெண்ணும் பெற்றோர்களின் சம்மதத்தின் பேரில் விசேட விவாகச் சட்டத்தின் கீழ் பதிவுத் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

# சொந்த நாட்டவர் சோம்பிக்கிடக்க வடநாட்டு அகதிகளுக்கு வரவேற்பா?

## சட்ட சபையில் சரமாரியான கேள்விகள்

## பக்தவத்சலனாரின் 'ஏக இந்திய' பதில்!

சென்னை, மே. 6—

விக்னேட் சுரங்கங்கள் வடநாட்டவர் ஆதிக்கத்தில் படிப்படியாக வருகின்றது என்று நாம் சொல்கிறோமல்லவா? அதை ருசுப்படுத்துவது போன்று சமீபத்தில் இந்தலிக்னைட் சுரங்கங்களில், அகதிகள் என்ற பெயரில் 22 வடநாட்டவர்கள் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளனர்.

சட்டசபையில் தொழில் மந்திரி பக்தவத்சலம், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர்கள் அகதிகளாயிருந்தாலும், இல்லாவிட்டாலும் தொழில் கற்றவர்கள் அவர்களை வேலைக்கமர்த்தியதில் தவறில்லை என்று சொல்லியிருக்கிறார்.

மேலும், "இந்த ராஜபத்திலேயே வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் ஒழிக்கப்படாமல் இருக்கும்போது வடநாட்டு அகதிகளை ஏன் இங்கு வேலைக்கு அமர்த்தவேண்டும்? அகதிகள் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய முழுப் பொறுப்பும் இந்திய அரசாங்கத்தினுடையதல்லவா?" என்று தோழர் கல்யாணசுந்தரம் கேட்டபோது, மந்திரி பக்தவத்சலம் 'மத்திய அரசாங்கம் என்பது இந்தியா முழுமைக்கும், சென்னைக்கும் சேர்ந்ததுதான் இருக்கிற'தென்றார்.

தோழர் கோவிந்தசாமியின் கேள்விக்குப் பதிலளிக்கையில், 'தமிழர்களை நிறையப் பேர்கள் வடநாட்டிலும் வேலை பார்க்கிறார்கள்,' என்று பக்தவத்சலம் சொன்னார்.

## போர்க்கொடி ஏந்துவோம்!

★

"தம்பி சம்பத் பேசுகையில், 'நமது லட்சியத்தை நிறைவேற்ற நாம் வெகுவிரைவில் போராட்டங்களைத் துவக்க வேண்டு'மென்றார். நம் லட்சியத்தைப் பரப்புவதிலே அதிக கவனம் செலுத்தி வருகிற நாம், போராட்டங்களைத் துவக்கத்தான் போகிறோம். அப்போது தம்பி சம்பத்தின் கையிலேயும் போர்க்கொடி ஒன்று தரப்படும், நிச்சயமாக!"

—சேலம் மாநாட்டில் அண்ணா

## அமெரிக்க-பாக். ராணுவ ஒப்பந்தம்

### அவாமி லீக் தலைவர் கேள்வி

டாக்கா, மே 5—

"அமெரிக்கா-பாக் இராணுவ உதவி ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை மக்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள்; அந்த ஒப்பந்தத்தை உடன் வெளியிடவேண்டும்," என்று அவாமி முஸ்லீம் லீக் தலைவர் மௌலானா அப்துல் ஹமீத்கான் பாஷானி பாக் பிரதமரை ஒரு தந்தியில் கேட்டிருக்கிறார்.

அவர் மேலும் பாக் பிரதமரை, "அமெரிக்கத் தலைவர் பண்டித நேருவுக்கு அளித்த பதிலில், 'இந்தியாவுக்கு எதிராக பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கா உதவும் இராணுவ தளவாடங்கள் உபயோகிக்கப்பட மாட்டாது' என்று கூறியுள்ளாரே, இது எப்படி நிபந்தனையற்ற உடன்படிக்கையாகும்?" என்று வினவியுள்ளார்.

## ஐக்கிய கேரளம் தங்கட்கு உடன்பாடுதானும்!

### ஆனாலும் தீர்மானத்தை ஆதரிக்கமாட்டாராம்!

### சட்ட சபையில் மந்திரி சுப்ரமணியம்

சென்னை, மே. 6—

இன்று சென்னைச் சட்டசபையில், தமிழ் நாட்டில் உள்ள மலையாளப் பகுதிகளை திருவாங்கூர் கொச்சியுடன் இணைத்துக் கொள்ளுமாறு கோரி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்தை ஆதரித்தும் எதிர்த்தும் பலமான வாக்குவாதங்கள் எழும்பின.

தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய கம்யூனிஸ்டு கட்சியினர், "திரு—கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்கவும், பிரெஞ்சுப் பிடியில் உள்ள மாஹி பகுதியை மலையாளத்துடனும், புதுவை, காரைக்கால் பகுதிகளை சென்னையுடன் இணைக்க ஏககாலத்தில் முயற்சி எடுக்கவும் செய்தால்" என்று அந்த தீர்மானத்தின் பின் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக்கோரி ஒரு திருத்தம் கொணர்ந்தனர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி பேசுகையில், தென்னாட்டின்மீது வடநாடு கொண்டுள்ள பிடியை சுட்டிக் காட்டிவிட்டு, டெல்லியிலிருந்து விடுபட்ட சுதந்திரத் தமிழகம் அமைக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தினார்.

மேலும் அவர், தென்னாட்டை வடநாடு பாரபட்சத்துடன் நடத்துகிறதென்பதற்கு எடுத்துக்காட்டாக, நேரு மட்டும் இந்தியப் பிரதமராகவும், அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவும் இருக்கிறாரென்றும், ஆனால் திரு. காமராஜர் சென்னையின் பிரதமராகவோ அல்லது காங்கிரஸ் தலைவராகவோ மட்டும்தான் இருக்கலாம் என்று சொல்லியுள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

நிதி மந்திரி சுப்பிரமணியம் விவாதத்திற்குப் பதிலளிக்கையில், "இந்த தீர்மானத்தை அரசாங்கம் மிகக் கவனமாகப் பரிசீலித்தது; தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்வதாலேயே ஐக்கிய கேரளம் தேவை எனக் கோரும் கேரள மக்களின் எண்ணத்தின் ஆசையில் நாங்கள் குறுக்கிடுவதாக எண்ணக்கூடாது. ஒரு மாநில புனரமைப்புக் குழு நியமிக்கப்பட்டிருக்கும்போது இப்படி ஒரு தீர்மானம் தேவைதானா என சிந்திக்க வேண்டு"மென்றார்.

பின்னர் திருத்தங்கள் ஓட்டுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும், திருத்தப்பட்ட தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு தோற்றது. தீர்மானத்திற்கு ஆதரவாக 35 ஓட்டுகளும், எதிராக 101 ஓட்டுகளும் கிடைத்தன.

## நமது முயற்சி

★

"நாம் திராவிடம் பெற விரும்புவது, குளத்திலே பாசியும், தூசியும் நிறைந்து தண்ணீர் இருந்தால், அந்த பாசியைத் தள்ளிவிட்டு, தூசியை வடிகட்டிவிட்டு, நல்ல தண்ணீரைப் பருக விரும்புவது போன்றது!"

—சேலம் மாநாட்டில் அண்ணா

## நில வரி விதிப்பில் மாறுதல்

### சென்னை அரசின் புதுமுறை

சென்னை, மே 4—

தற்போதுள்ள நிலவரி முறைப் பிரகாரம் சிறிய குடியானவர்களுக்கு எவ்வளவு வரி விதிப்பு இருக்கிறதோ அவ்வளவேதான் டனக்காரர்களுக்கும் இருக்கிறது. இந்த முறையைப் போக்கவும், மாநில வரி வருமானத்தைப் பெருக்கவும் சென்னை மாநிலத்தில் நிலவரிக்கு சர்சார்ஜ் விதிப்பது பற்றிய மசோதாவை சர்க்கார் பிரசுரித்திருக்கின்றது. விவரங்கள் வருமாறு:

பசலிக்கு 500 ரூபாய்க்கு மேல் நிலவரி செலுத்தும் நிலச்சுவான்தார் பின்வரும் விகிதப் பிரகாரம் சர்க்காருக்குச் சர்சார்ஜ் செலுத்தவேண்டும்:

1. முதல் 250 ரூபாய் வரிக்கு சர்சார்ஜ் கிடையாது.
2. அடுத்த 250 ரூபாய் வரிக்கு ரூபாய்க்கு 2 அணா வீதம் சர்சார்ஜ் செலுத்தவேண்டும்.
3. அடுத்த 500 ரூபாய் வரி வரையில் ரூபாய்க்கு 4 அணா வீதம் சர்சார்ஜ் செலுத்த வேண்டும்.
4. அதற்குமேல் வரி செலுத்துபவர்களுக்கு ரூபாய்க்கு 8 அணா சர்சார்ஜ் விதிக்கப்படும்.

## புதிய சர்க்கரை தொழிற்சாலைகள்

### தென்னிந்தியாவுக்கு அனுமதி

புதுடில்லி, மே 6—

புதிய சர்க்கரைத் தொழிற்சாலைகள் நிறுவுவதற்காக சென்னையில் மூன்று தொழில் நிலயங்களுக்கு லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறதென்றும், மற்றொன்றின் மனு ஆலோசனையிலிருக்கிறதென்றும் இந்திய மேல் சபையில் விவசாயமந்திரி கூறினார்.

லைசென்சு பெற்ற மூன்று நிலயங்களில் ஒன்று ஏற்கெனவே இயந்திரங்களை தருவித்துவிட்டதென்றும், நிர்மூன்றிலும் நாள் ஒன்றுக்கு 1800 டன் சர்க்கரை உற்பத்தியாகுமென்றும், வட இந்தியாவில் கரும்பு சப்ளை பெறுவதில் கஷ்டமாக இருக்கும் பகுதிகளில் உள்ள டல தொழிற்சாலைகளைத் தென் இந்தியாவுக்கு மாற்ற அவைகளின் சொந்தக்காரர்களை இணங்கச் செய்வதற்கு முயற்சித்து வருவதாகவும் கூறினார்.

## "நம் நாடு" வெளியூர் ஏஜண்டு தோழர்கட்கு

"நம் நாடு" வெளியூர் ஏஜண்டு தோழர்கட்கு ஏப்ரல்-மாதம் பில்கள் அனுப்பப்பட்டிருக்கின்றது. பில் பாக்கியை உடன் அனுப்ப வேண்டுகின்றோம். டெபாசிட் தொகையை விட அதிகப் பாக்கியுள்ள தோழர்கள் 10—5—54-க்குள் இங்கு ரூபாய் கிடைக்கும்படி அனுப்பாவிட்டால், "நம் நாடு" அனுப்புவதை நிறுத்தி வேறு ஏஜண்டு நியமிக்கப்பட வேண்டி வரும் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

இராயபுரம் - சென்னை
7—5—54

பொறுப்பாளர்
'நம் நாடு.'

## கழகக் கூட்டங்கள்

★

### மாதானம்

8—5—54 சனி மாலை

பேசுவோர்:
க. அன்பழகன்
ஆர். பாலகுருசாமி

★

### கவசம்பட்டு

8—5—54 சனி மாலை

பேசுபவர்:
என். வி. நடராசன்

★

### நாகப்பட்டினம்

9—5—54 ஞாயிறு மாலை

பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

### திருவெண்காடு

9—5—54 ஞாயிறு மாலை

பேசுவோர்:
க. அன்பழகன்
ஆர். பாலகுருசாமி

★

### பாலக்காடு

9—5—54 மாலை 6 மணிக்கு
இடம்: கோட்டை மைதானம்

பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
என். எஸ். இளங்கோ

★

### கொட்டாச்சேரி

10—5—54 திங்கள் மாலை
இடம்: காந்தி பூங்கா
தலைவர்: எஸ். சம்சுதீன்

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கரந்தை-கணேசன்

★

### வேதாரணியம்

10—5—54 மாலை 5 மணிக்கு
இடம்: மேல வீதி
தலைவர்: எம். ஏ. ரசாக்

பேசுபவர்:
வைத்திலிங்கம்

★

### திருநகரி

10—5—54 திங்கள் மாலை

பேசுவோர்;
க. அன்பழகன்
ஆர். பாலகுருசாமி

## மே தின விழா

8—5—54 மாலை 6-30 மணிக்கு, திருப்பூர் மறையரேடியோ மைதானத்தில், திருப்பூர் தொழிலாளர் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், மே தினப் பொதுக்கூட்டம் தோழர் எம். பி. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். அப்பாவு ஆகியோர் பேசுவர்.

• • •

9—5—54 காலை 9 மணியளவில், புளியந்தோப்பு தி. மு. கழக 18-வது வட்டம் கிளைக் கழகப் பணி மனையில் மே தின விழாக் கூட்டம் தோழர் மகாலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

9—5—54 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு, வெல்லூர் சிடி, சிங்க-லால்-பாக்கில், மே தின விழா பொதுக்கூட்டம் தோழர் கே. சிராமுலு தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், மு. வேணுகோபால் ஆகியோர் பேசுவர்.

### இராயபுரம் தி. மு. கழக உறுப்பினர்கட்கு

9-5-54 மாலை 6 மணிக்கு, இராயபுரம் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், சென்னை, இராயபுரம், மாதா விக்னேஸ்வரர் கோயில் தெரு, 79-வது நெம்பருள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

### கடலூர் ஓ. டி. 2-வது வட்டக் கிளை தி. மு. கழக செ. குழு உறுப்பினர்கட்கு

9—5—54 மாலை 7-30 மணிக்கு, அண்ணா அன்பு நிலயத்தில், கடலூர் புதுநகர் 2-வது வட்டக் கிளை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

### திருமணம்

9—5—54 ஞாயிறு காலை 6 மணிக்கு, (தஞ்சை) அய்யம்பேட்டையில், தோழர் சுந்தரமூர்த்திக்கும்—தோழியர் ராஜாம்பாளுக்கும், தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில் திருமணம் நடைபெறும்.

### நகர இளைஞர் கழகம்

9—5—54 காலை $9\frac{1}{2}$ மணிக்கு, குன்னூர், நெ. 10, மாணிக்கச் செட்டித் தெருவில், மறை. திரு. மாணிக்கவாசகனார் அவர்கள் 'அப்பர் தமிழ்ப் பணி' என்பது பற்றி பேசுவார்.

## வெப்பத்தால் நூற்றுக்கணக்கில் வௌவால்கள் மரணம்

கோதாரா, மே. 5—

111 டிகிரிக்கு மேல் வெப்பம் அதிகரித்துவிட்ட காரணமாக, (பஞ்சாப்) இக்கரப் புறங்களில் நூற்றுக் கணக்கில் வௌவால்கள் செத்து மடிந்து விட்டன. மக்களின் உடல் நலத்தைக் கருதி, செத்த வௌவால்களை அகற்றுவதில் நகர் அவையில் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர்.

## பொது மக்கள் காவலில் போலீசார்!

செட்டப்பாக்கம், மே 6—

மண்ணடிப்பேட்டையில் விடுதலை அடைந்த பகுதிகளைச் சார்ந்த பல பொது மக்கள் ஆயுதம் தாங்கிய 23 பிரெஞ்சிந்தியப் போலீஸ் படையினரை நிராயுதபாணிகளாக்கி பிடித்து விடுதலையடைந்த செட்டப்பாக்கத்தில் காவலில் வைத்துள்ளனர்.

# ‘சொல்வதில்லை—சொன்னபின் வெற்றி பெறாமல் இருந்ததும் இல்லை!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிறவர்களுக்கு—‘சட்ட சபையிலிருந்துகொண்டே திராவிட நாட்டை நாம் பெற முடியும்!’—என்று! சட்ட சபை தீர்மானிக்கும்—‘இந்த நாட்டவரிடமிருந்து பெறப்படும் வருமான வரி, மத்திய அரசாங்கத்துக்குத் தரப்பட மாட்டாது,’—என்று! ஆனால், மத்திய அரசாங்கமும் நம்மைச் சும்மா விடாது; கயானாவில், மக்கள் சபையையே வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் கலைத்துவிட்டு, அந்த நாட்டு மக்கள் கட்சித் தலைவரான ஜெட்டி ஜெகன் போன்றோரை சிறைப்படுத்தியதுபோன்று, இந்த வடநாட்டு அரசாங்கமும், தந்திச் செய்தியில், இங்குள்ள கவர்னருக்குத் தாக்கீது அனுப்பும்—‘சட்ட சபையைக் கலைத்து, அவர்களைக் கைது செய்,’—என்று! சிறை மீண்ட நாம், மீண்டும் தேர்தல் வைத்தால் அதிலும் போட்டியிட்டு, மந்திரி சபை அமைப்போம்; தேர்தலே வைக்காது கவர்னர் ஆட்சி நடக்கிறது என்றால், ‘மக்களே! நம்மை நாமே ஆள்வதுதான் ஜனநாயகம்; நம்மை நாமே இப்போது ஆளவில்லை; வடநாட்டு கவர்னர் நம்மை ஆள்கிறார்; ஆகவே, அவர் அரசாங்கத்திற்கு வரி தராதீர்கள்!’ என்று சொல்லி, ஒரு பெரிய தீவிர வரிக் கொடா இயக்கத்தை நடத்துவோம்; அப்போது நிச்சயமாக இந்த வடநாட்டு அரசாங்கம் வளைந்துதானே தீரவேண்டும்! நாம் தேர்தலிலே போட்டியிட வேண்டுமென்று சொல்வது, வடநாட்டானுக்குப் பணிந்து மந்திரிகளாய் இருப்பதற்கல்ல; நமது நாட்டை நமதாக்கிக் கொள்வதற்காகத்தான் என்ற நல்ல உள்ளத்தைத் தந்தை பெரியார் அவர்கள் சந்தேகிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.”

தலைவர் இளம்வழுதி தனது தலைமை உரையிலே குறிப்பிட்டார்—‘துரோகிகளுக்கு இனி நாம் துணைபோகக் கூடாது; நாமே நேரடியாக அரசியலைக் கைப்பற்றவேண்டும்’—என்று! அருமையான வாசகம்; ஆனால் சற்று ஆபத்தான வாசகம்! தேர்தலிலே ஈடுபட முடியும் நம்மால்; வேண்டிய அளவு வெற்றியும் பெற முடியும் நிச்சயமாக; ஆனால், உடனே தந்தை பெரியார் ‘பார்! பார்! இவன் இதற்காகத்தான் என்னிடமிருந்து பிரிந்து போனான்,’ என்று கூறுவார். நமக்கு அவரிடம் இன்னும் ‘விட்டகுறை தொட்டகுறை’ கொஞ்சம் இருக்கிறது. என்னதான் அவர் நம்மைச் சொன்னாலும், நமக்கு அவரிடம் பற்றும் பாசமும் இருக்கத்தான் செய்கின்றது; அவர் மட்டும், “என்ன, இவனை வளர்த்துவிட்டோம், வளர்த்துவிட்டோம் என்கிறார்களே! தேர்தலிலேதான் நின்று பார்க்கட்டுமே!” என்று சொல்லாமல் சொல்லட்டும்; நான் வருகிற தேர்தலிலே போட்டியிட்டு திமுகவை அரசோச்சச் செய்கிறேன்.

‘நாமே அரசியலைக் கைப்பற்ற வேண்டும்’ என்ற கால நிலை மாறவே இத் தலைவர் கூறியதை நான் கண்டு மகிழ்ந்து பாராட்டுகிறேன்; எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது—நம்முடைய மனத் தூய்மையை பெரியார் அவர்கள் அறிந்து கொள்வார்கள் என்று! நாம், அவருக்குப் போட்டியாக கட்சி நடத்துவதாக யாரேனும் நினைத்தால் அவர்களுக்குச் சொல்கிறேன்—போட்டிக் கட்சி நடத்துவது என்றால் இப்படி அல்ல கட்சி நடத்துவது! எங்களைப் பற்றி தவறான ஒரு எண்ணத்தை தந்தை கொள்ளமாட்டார் என்றே நான் இன்னமும் நம்புகிறேன்.

“நான் ஏன் இதை சேலத்திலே வைத்துச் சொல்கிறேன் என்றால், சேலம் அவருக்குத் தாய் வீடு! தந்தையும் தனயனும் பிரிந்துவிட்டதைக் கண்டு கருத்தவோர் சேலத்திலே ஏராளம்! தந்தை திராவிடர் கழகமாயும், தனயன் முன்னேற்றக் கழகமாயும் பிரிந்திருப்பதைக் கண்டு வருந்துபவர் பலர். இங்கே சொன்னால், நமது நம்பிக்கை வெற்றி பெறும் என்று நான் நினைக்கிறேன்.

பெரியார் சொல்லட்டும் ‘தேர்தலில் போட்டியிடுங்கள்,’ என்று; கடலூரிலே தோழர் கோவிந்தசாமியை, மக்களை மறந்து மந்திரியாகி இருக்கிற எஸ். எஸ். ராமசாமி படையாச்சிக்கு எதிராக நிறுத்தி வெற்றி பெறச் செய்கிறேன்; நான் அனேகமாகச் சொல்வதில்லை; சொன்னால் வெற்றி பெறாமல் இருந்ததும் இல்லை; நான் இப்படி, ‘பெரியார் சொல்லட்டும்,’ என்று சொல்லும்போது நண்பர்கள் கேட்கின்றனர்—‘எல்லாவற்றிற்கும் பெரியார், பெரியார் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீரே, அண்ணாதுரை?” என்று! அவர்களின் மனத்தாங்கலை நான் உணர்கிறேன். என் செய்வது? நாம் அங்குதானே தயாரானோம்! பெற்ற தாயை மறக்கலாமா? தந்தையைத் தான் மதிக்காமலிருக்கலாமா? நான் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்—பெரியார் அவர்கள் நம்மை என்னதான் பேசினாலும் நீங்கள் திரும்ப அதற்கு எதுவும் சொல்லக்கூடாது.

வெறும் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று ஆக்கவேண்டாமால் சொல்லுங்கள்—இன்னும் ஒரு திட்டம் சொல்கிறேன் வாரத்திற்காக—‘சென்னை ஆச்சிருக்கே! காஞ்சியில் கோளாறிருக்கே!’ என்று சொன்னால், நான் முந்தி, நீ முந்தி என்று ஆந்திரரும், கேரளரும், ‘திராவிட நாடு திராவிடருக்கே—வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக!’ என்று குரல் எழுப்ப மாட்டார்களா?

கோவையிலே ஒரு தேனீர் விருந்து, சில முதலாளிகளுக்கு; அங்கே—‘திராவிட நாடு திராவிடருக்கே; லாபம் உங்களுக்கே!—என்று சொன்னால், மறுகணம் பாருங்கள், ‘இந்து’ மாதிரிப் பெரிய பத்திரிகை நிலையங்கள் நமக்குக் கிடைக்கும்! இன்னும் எத்தனையோ வசதிகள்; ஒரே மாதத்தில் திராவிடத்தைப் பெற்று விடலாமே!”

☆

# நாம் கோரும் விடுதலை வீணருக்கல்ல! வியர்வை சிந்தும் பாட்டாளிக்கு!!

தொடர்ந்து பொதுச் செயலாளர் அவர்கள் பேசியதாவது :-

“முதலாளித்துவமும், நிலப் பிரபுத்துவமும் ஒழிக்கப்பட்ட சமதர்மக் குடியாட்சியான திராவிடம் காண நாம் விழைகிறோம். அந்நிய மொழி ஆதிக்கம், அந்நிய நாட்டாதிக்கம், முதலாளித்துவ ஆதிக்கம் முதலியன இல்லாத நாடு காண நாம் ஆசைப்படுகிறோம். நாம் மேற்கொண்டுள்ள பணி செங்குத்தான மலைமீது ஏறுவது போன்றது. மலையின்மீது ஏறும்போது பாறை உருண்டு நம்மையே கீழே தள்ளிவிட்டால், நாம் எங்கே மலையின் உச்சிக்கு ஏற முடியும்?

நமது விடுதலைக் கொடி—போர்க் கொடி உயர்த்தப்பட முதலில் நாம் நமது லட்சியத்தை எல்லா மக்களும் புரிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

காங்கிரஸ், பிர்லா டாட்டாக்களின் கைப்பாவை ஆகிய தால்தான் சாதாரண மக்களுக்கு வாழ்வு கிடைக்காமற் போய் விட்டது. நம்முடைய நாட்டிலே உள்ள இயற்கை வளங்களை எடுத்துக் காட்டி, நமக்கு நாடு வேண்டும் என்று சொன்னால், அந்த இயற்கை வளங்களை எல்லாம், நாளைக்கு நாடு கிடைத்ததும் அழகப்ப செட்டியாரை அனுபவிக்க விட்டுவிடுவதற்காகவா? இல்லை; நிச்சயமாக இல்லை! உழைப்பவனுக்குச் சொந்தமாக்க, மக்களுக்கெல்லாம் வயிறார உணவும், அறிவார கல்வியும், மானம் காக்க உடையும், உறைவிடமும் தரத்தானே தவிர, யாரோ ஒரு சிலரை வாழ வைக்க அல்ல! திராவிட வளங்கள் எல்லாம் திராவிடருக்கே பயன்படச் செய்யப்படும் என்பதை நன்றாகத் தெளிவாகப் புரிந்து கொள்ளாது, அவசரப்பட்டு எந்த முதலாளியும் இங்கே வந்துவிட வேண்டாம்! ஏனென்றால், நம்மோடு நெருங்கிப் பழகுகிற திரு. ஜி. டி. நாயுடுவால்கூட நம்மோடு ஒத்துவர முடியவில்லை. தேர்தல் காலத்திலே ‘திராவிட நாடு திராவிடருக்கே என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திடுங்கள் என்ற போது, ‘என்னிடம் கூடவா?’ என்று என்னிடம் கேட்டார்; நான் வெறும் புன்சிரிப்பைப் பதிலாகத் தந்தேன்; பின்னர் அவர், ‘உங்கள் திராவிடத்தில் ரஷ்ய முறை இருக்குமா?’ என்றார்; ‘ஆம்’ என்றேன்! அவர் பதில் சொல்லவும் இல்லை; ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவும் இல்லை.

நான், ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், திராவிட நாட்டில் முதலாளித்துவ முறை நிச்சயம் ஒழிக்கப்படும்; ‘ஏழை ஏழையாகவே இருப்பான்; பணக்காரன் கொழுத்துக் கொண்டே போவான்,’ என்னும் நிலை நிச்சயமாக மாற்றப்படும். ஏழை - பணக்காரன், தொழிலாளி - முதலாளி, அடிமை - ஆண்டான், உழைப்பவன் - உழைக்காமலேயே, மேனி வாடாது பிறர் உழைப்பில் வாழ்பவன் என்கிற ஏற்றத் தாழ்வுகள் அற்ற ஒரு சமதர்மக் குடியாட்சியாக விளங்கும் திராவிட நாடு!

நாம் அமைக்கும் சமதர்மம் தழைக்க—நிலைத்து நிற்க—சமுதாயம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. மோட்டார் செல்ல நல்ல சாலை தேவைப்படுவதைப் போன்று, பாட்டிற்குத் தாளம் ஒத்திருக்க வேண்டியது போன்று, ஆட்டத்திற்கு அரங்கம் சரியானதாயிருக்க வேண்டுவது போன்று, சமதர்மம் நிலைக்க, மக்கள் நல்ல புதிய உள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்களின் எண்ண ஏற்பாடுகள் மாற்றப்பட்டு, புதுமையை வரவேற்கும் பண்பு கொண்டதாய் சமுதாயம் பண்படுத்தப்பட வேண்டும். அந்தப் புதியதோர் சமுதாயம் காண இத்தகு மாவட்ட மாநாடுகள் பெரிதும் உதவும் உதவும் என்று நான் நம்புகிறேன்.”

# உழவன் உள்ளத்தில் புயல் இருக்கும் வரை...!

## வயலில் வளம் காண இயலாது!

### திருப்பத்தூர் தாலூகா விவசாய ராயத்துகள் மாநாட்டில் எச்சரிக்கை

திருப்பத்தூர், (வ. ஆ.) மே. 4—

30—4—54ல், இந்நகரின் தாலூகா ஆபீஸ் எதிரில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில், திரு. சங்கர மேனன் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் டி. எம். கிருஷ்ணசாமி, முனிசாமி, ராமன் நாயர் ஆகியோர் பேசினர். பின்னர் தோழர் வி. என். தத்தப்பன பேசியதாவது :—

“இந்தியத் துணைக் கண்டம் பஞ்சத்தாலும், பசியாலும், பரிதவித்திருந்த நேரத்தில் அரசாங்கம், உழவர்களிடம் காடு மேடு தரிசு, புறம்போக்கு நிலங்களை யெல்லாம் பயிரிட்டு நாட்டு மக்களின் பசியைத் தீருங்கள் என்று கோரியது. உழவர்கள் நம்பினார்கள்; எங்கும் பயிரைக் காண வைத்தார்கள்; ஓரளவு பசியைத் தீர்த்தார்கள்; அதனால் தான் ஒரே நாளில் சென்னையின் முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார், ‘உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்துவிட்டேன்,’ என்று ‘ஆலாபனை’ செய்தார்; இந்த வாய்ப்பை உழைப்பால் தந்த உழவனுக்கு இன்று, புறம்போக்கு நிலத்தில் பயிரிட்டமைக்கு ஏக்கருக்கு ரூ. 20, 40, 50, 60, 100, 400 வரை அபராதம் விதித்து ஜப்தி செய்கிறது.

“நில சீரமைப்பு ஏற்படாத வரையில் இந்நாட்டில் நிம்மதி நிலவாது; உழவன் மனதில் புயல் இருக்கும்வரை வயலில் வளம் காணாது; உழவன் தேவையை பூர்த்தி செய்தால் தான் இந்நாடு உயர்வடையும்—இல்லையேல், நாடு தாழ்வடைவது திண்ணம்,” என்றார்.

### பாண்டுப் தி. மு. கழகம்

பாண்டுப், (பம்பாய்) மே 2—

1—5—54 காலை 9 மணிக்கு செயற்குழு கூட்டம் தோழர் கெ. செல்லபாண்டி தலைமையில் கூடி, அண்மையில் பம்பாய் வர இருக்கும் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களைக் கொண்டு உறுப்பினர் கூட்டம் நடத்துவதென்றும், புதிதாக செயற்குழுவில் தோழர்கள் கே. என். அய்யா, ஏ. சம்பத், என். செல்லத்துரை, என். வெங்கடாசலம், என். தானியேல் ஆகியவர்களை உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

### இராசிபுரம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் யூனியன்

நிர்வாகக் கமிட்டி கூட்டம் தோழர் கந்தசுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது, யூனியன் சார்பில், இராசிபுரம் வழியாக சென்னை செல்லும் சைக்கிள் ஜாதாவிற்கு வரவேற்பளிக்கவும், ஆசிரியர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள வீட்டு வாடகை அலவன்சை தொடர்ந்து தரவேண்டுமெனவும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### ஊராண்மைக் கழக உறுப்பினர் தேர்தல்

கழகத் தோழர்கள் வெற்றி

உலிபுரம், மே 2—

28—4—54ல் நடந்த உலிபுரம் ஊராண்மைக் கழக உறுப்பினர் தேர்தலில் கழகத் தோழர்கள் ச. ரா. துரைசாமி போட்டியின்றியும், ஆ. பெ. இராமசாமி போட்டியில் அதிக வாக்குகள் பெற்றும் வெற்றி பெற்றனர். அன்று மாலை, வெற்றி பெற்ற தோழர்களுக்குத் தேனீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது.

### பஸ்லுல் ஹக் பதட்டம்!

கராச்சியில் எதிரொலி

கராச்சி, மே 6—

கிழக்கு வங்கத்தின் புதிய முதல்வர் பஸ்லுல் ஹக், சமீபத்தில், “இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்தது தவறு; மேற்கு வங்கமும் கிழக்கு வங்கமும் ஒன்றே” என்று பேசினாரல்லவா!

பாகிஸ்தானின் அடிப்படைக்கே உலை வைக்கும் இந்தப் பேச்சுக்கள் கராச்சியில் மிகுந்த குழப்பத்தை உண்டுபண்ணியுள்ளன. பாக் மந்திரி சபை அவசரமாகக் கூடி இதுபற்றி ஆலோசிக்கிறது. அடுத்த வாரத்தில், ஹக், பாக் பிரதமரை சந்திக்கும் போது, அவர் அப்படிப் பேசிய தற்கான காரணங்கள் கேட்கப்படலாமெனத் தெரிகிறது. இதற்கிடையில், ஹக் தனது பேச்சுக்களை திரும்பப் பெற வேண்டுமென கராச்சி வற்புறுத்தலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சகம் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,